(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(8).]

# பாராளுமன்றத்தின்
# 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்
## 2025 பெப்ரவரி 07, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2025, பெப்ரவரி 20, வியாழக்கிழமை)**

487/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1984.07.03 ஆம் திகதி முதல் 2020.03.18 ஆம் திகதி வரையில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுநராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள கஹதுாவ ஆராச்சிகே நிஹால் என்பவரின் ஓய்வூதியத்தைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(ii) இவர் ஓய்வு பெற்று 5 வருடங்கள் கழிந்துள்ள போதிலும், இவரது ஓய்வூதியம் தொடர்பான பணிகளை நிறைவு செய்யாமை சுகாதார அமைச்சின் பலவீனம் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கராப்பிட்டிய வைத்தியசாலைப் பணிப்பாளரின் FQ/02/2018 இலக்கம் கொண்ட 2023.12.08 ஆம் திகதிய கடிதத்திற்கமைய நியமிக்கப்பட்டுள்ள பூர்வாங்க விசாரணைக் குழுவின் அறிக்கையினை ஏற்று, உரிய அறவீடுகளை மேற்கொண்டு, ஓய்வூதிய விடயங்களுக்காக ஆவணங்களை விடுவிக்காமல் இருப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி அறிக்கை தொடர்பில் நிஹால் அவர்களுக்கு அறிவிக்காமல் இருப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) மேலே (i)இல் குறிப்பிடப்பட்ட அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை எனில், அதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) அவ்வாறாயின், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நடவடிக்கைகள் குறித்து நிஹால் அவர்களுக்கு அறிவிக்காமல் இருப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

(vi) 2020 ஆம் ஆண்டு முதல் பார்க்கின்சன் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நிஹால் அவர்களின் ஓய்வூதியத்தை தயார்படுத்துவதற்கு தாமதப்படுத்தும் அலுவலர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 01, சனிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

380/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) இலங்கையிலுள்ள பன்னாள் மீன்பிடிக் கலங்களின் எண்ணிக்கை, இன்றளவில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பன்னாள் மீன்பிடிக் கலங்களின் எண்ணிக்கை மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடாத பன்னாள் கலங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) இலங்கையிலுள்ள ஒரு நாள் கலங்களின் எண்ணிக்கை, இன்றளவில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஒரு நாள் கலங்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடாத ஒரு நாள் கலங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) கடற்றொழிலை மேம்படுத்துவதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

385/2025

கௌரவ வருண லியனகே,— நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேச செயலகப் பிரிவுகளில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுகிறது என்பதையும்;

(ii) இதன் காரணமாக அந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் கடும் சிரமங்களையும் சுகாதார சீர்கேடுகளையும் எதிர்கொண்டுள்ளனர் என்பதையும்;

(iii) முறையான நீர் வழங்கலுக்கான வழிமுறைகள் இன்மையால் குடிநீர்ப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த நீர்ப் பற்றாக்குறைக்குத் தீர்வாக நடைமுறைப்படுத்தப்பட்ட "விசல் இரத்தினபுரி நீர் வழங்கல் திட்டத்தின்" 2ஆம் கட்டப் பணிகள் எந்தளவில் நிறைவுசெய்யப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இரண்டாம் கட்டப் பணிகள் நிறைவுசெய்யப்பட்டதன் பின்னர், அதற்குள் அடங்காத பகுதிகளுக்கு நீர் வசதிகளை வழங்குவதற்கு புதிய நீர் வழங்கல் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இரத்தினபுரி மாவட்டத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற சமுதாய நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) புதிய சமுதாய நீர் வழங்கல் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

387/2025

கௌரவ சானக மாதுகொட,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி துறைமுக வளவில் காணப்பட்ட அரச மரம் அழிவடைந்ததன் காரணமாக அதற்குப் பதிலாக புனித ஜயஶ்ரீ மகா போதிமரக் கன்று ஒன்றை நடுவது குறித்து துறைமுக ஊழியர்கள் மற்றும் நிருவாகத்தினருக்கு இடையே தோன்றியுள்ள கருத்துவேறுபாடு பற்றி அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அரச மரக் கன்றை காலி துறைமுக வளவில் நடுவதிலுள்ள தடைகள் யாவை என்பதையும்;

(iii) காலி துறைமுக வளவில் மேற்படி அரச மரக் கன்றை நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(iv) மேற்படி கருத்துவேறுபாட்டைத் தீர்க்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

418/2025

கௌரவ அருண பனாகொட,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிட்டிப்பன, மாஹேனவத்த பிரதேசத்தில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியொன்று இதற்கு முன்னர் இருந்ததா என்பதையும்;

(ii) இன்றேல், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியொன்று அப் பிரதேசத்தில் உள்ளதா என்பதையும்;

(iii) அக்காணியானது எவரேனுமொரு தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், இதனை விற்பனை செய்வதற்கான ஏதேனும் ஏற்பாடு உள்ளதா என்பதையும்;

(v) அக்காணி விற்பனை செய்யப்பட்டிருப்பின், விற்பனை செய்யப்பட்ட மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்;

(vi) மேற்படி காணியின் பர்சஸ் ஒன்றின் பெறுமதி யாதென்பதையும்;

(vii) அரசின் நடவடிக்கைகளுக்கு காணிகள் தேவையாக இருக்கும் நிலையில், அக்காணியை ஒரு வெளித் தரப்புக்கு விற்பனை செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(viii) அக்காணியை மீண்டும் அரசாங்கத்துக்கு சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

452/2025

கௌரவ டி.கே. ஜயசுந்தர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிங் கங்கை பெருக்கெடுப்பதன் காரணமாக காலி மாவட்ட மக்களின் வாழ்வியலுக்கும் உடமைகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) 2000 ஆம் ஆண்டின் பின்னர் கிங் கங்கையின் பெருக்கெடுப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது வேறு நோக்கத்தைச் செயல்படுத்துவதற்கான உத்தேச கருத்திட்டங்கள் தொடர்பாக அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அறிக்கைகளைத் தயாரித்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்ட அறிக்கைகள் / சாத்தியவள ஆய்வறிக்கைகளைத் தயாரிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(vi) அதற்கான நிதியைப் பெற்றுக்கொண்ட மூலங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிங் கங்கையின் பெருக்கெடுப்பைக் கட்டுப்படுத்துவதற்காக கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒவ்வொரு கருத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, முடிவுற்ற ஆண்டு, ஒதுக்கப்பட்ட தொகை, செலவிட்ட தொகை, செயற்படுத்திய நிறுவனம் மற்றும் பெறப்பட்ட தீர்வுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 03, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

434/2025

கௌரவ தினிது சமன்,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ள இரத்தினக்கல் சுரங்க அனுமதிப்பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை ஆண்டுவாரியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதும் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ளதுமான இரத்தினக்கல் சுரங்கங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி இரத்தினக்கல் சுரங்கங்களில், அகழ்வு முடிந்த பின்னர் உரிய நியமத்தின்படி மூடப்பட்ட இரத்தினக்கல் சுரங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அத்தகைய இரத்தினக்கல் சுரங்கங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

439/2025

கௌரவ நிஷாந்த பெரேரா,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 29, கொலுவமுள்ள கிராம அலுவலர் பிரிவில் கைத்தொழில் பேட்டை அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கைத்தொழிற் பேட்டையின் மொத்த நிலப்பரப்பு எத்தனை ஏக்கர் என்பதையும்;

(iii) மேற்படி நிலப்பரப்பில் இன்றளவில் எத்தனை ஏக்கர் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(v) மேற்படி கைத்தொழிற் பேட்டையில் இன்றளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கைத்தொழில்கள் மற்றும் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள கைத்தொழில்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

448/2025

கௌரவ ருவன் விஜேவீர,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள காட்டு யானைகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை மனித-யானை மோதல்கள் காரணமாக உயிரிழந்துள்ள காட்டு யானைகள் மற்றும் கொம்பன் யானைகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மனித-யானை மோதல் ஏற்படுவதற்கான அடிப்படை காரணிகள் யாவை என்பதையும்;

(iv) மனித-யானை மோதலை முகாமைத்துவம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

450/2025

கௌரவ பத்மசிறி பண்டார,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புறக்கோட்டை, பெஸ்டியன் வீதியில் அமைந்துள்ள 42 கடை அறைகளின் திறப்பு விழா சார்ந்த ஊடக பிரசித்தப்படுத்தலுக்கான மொத்த செலவாகிய ரூ.19,301,403.61 தொகையிலிருந்து ரூ.17,639,938.86 பணத்தொகை டி.ஆர்.ஐ.ஏ.டீ.நிறுவனத்துக்கு முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவ்விடயத்தில் பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி முற்பணத் தொகையை செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பவர் யாரென்பதையும்;

(iv) மேற்படி ஊடக பிரசித்தப்படுத்தலுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெருமளவு பணத்தொகை செலவு செய்யப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(v) மேற்படி விழாவையொட்டி ஊடக பிரசித்தப்படுத்தல் செய்யப்பட்டதெனில் அத்தகைய பிரசித்தப்படுத்தல் அரச ஊடக நிறுவனமொன்றின் வாயிலாக மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

454/2025

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள கைத்தொழில் பேட்டைகளில் தற்போது தொழிற்படு நிலையிலுள்ள கைத்தொழில்களின் எண்ணிக்கை, அவற்றில் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகள் மற்றும் அவற்றுக்குரிய வணிகத் துறைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) கைத்தொழில் பேட்டைகளில் தொழிற்படு நிலையில் இருந்து, தற்போது மூடப்பட்டுள்ள கைத்தொழில்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) தற்போது கைத்தொழில் பேட்டைகள் அதிகபட்ச இயலளவுடன் இயங்குகின்றனவா என்பதையும்;

(iv) மேற்படி கைத்தொழில் பேட்டைகளில் புதிய கைத்தொழில்களை தொடங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளனவா என்பதையும்;

(v) இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் எண்ணிக்கை பற்றிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புதிய கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) அதற்கான மூலதனத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும் வழிமுறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

461/2025

கௌரவ ருவன் மாபலகம,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அத்தனகல்ல, கலகெடிஹேன சந்தியிலிருந்து, கொழும்பு-கண்டி பிரதான வீதியை அடையும் மங்கலதிரிய பாதையில் நிர்மாணிக்கப்படுகின்ற பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி, பணிகள் நிறைவு செய்யப்படவிருக்கும் திகதி மற்றும் பாலம் திறந்துவைக்கப்படவுள்ள திகதி ஆகியன வெவ்வேறாக யாவை;

(ii) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட அரச அல்லது தனியார் நிறுவனங்கள் யாவை;

(iii) நிர்மாணப் பணிகளுக்காக இதுவரையில் செலுத்தப்பட்டுள்ள மற்றும் செலுத்த வேண்டியுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாலமானது உரிய தர நியமங்களுக்கு அமைவாக நிர்மாணிக்கப் பட்டுள்ளதா என ஆய்வு செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், ஆய்வு செய்யப்பட்ட திகதி மற்றும் யாரால் ஆய்வு செய்யப்பட்டது;

(iii) நிர்மாணப் பணிகளில் இடம்பெற்றுள்ள குறைபாடுகளுக்கான (பாலத்தின் உயரம், நீளம், அகலம் மற்றும் தடிப்பு) பொறுப்பினை மேற்படி நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட நிறுவனம் ஏற்றுக்கொள்ளுமா;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

481/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அரபுக் கல்லூரிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அரபுக் கல்லூரிகளுக்கென பொதுப் பாடநெறியொன்று இல்லாததுடன், ஒவ்வோர் கல்லூரியிலும் வெவ்வேறு பாடநெறிகள் கற்பிக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி அரபுக் கல்லூரிகளுக்கென பொதுப் பாடநெறியொன்றை அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(v) மேற்குறிப்பிட்ட பொதுப் பாடநெறியை மற்றும் விரும்பிய வேறு ஏதேனும் பாடமொன்றை பயில்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

485/2025

கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொன் சைமன் விஜேவிக்ரம சமரகோன் அவர்களுக்கு சொந்தமான சுமார் 76 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட கஹபொல, 'ரெஜிடேல்வத்த' என்ற காணி பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் கீழ் இருந்ததென்பதையும்;

(ii) மேற்படி காணியின் ஒரு பகுதியில் சாக்கிய இராசதானியின் மாதிரி அமைப்பொன்று அப்போதைய பிரதமரின் ஆலோசனையின் பேரில் நிர்மாணிக்கப்பட்டு 2017.05.11 ஆம் திகதி அப்போதைய சனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது என்பதையும்;

(iii) "உலகம் முழுவதிலுமுள்ள பௌத்த மக்களுக்கான ஒப்பற்ற பரிசு" என அதற்குரிய நினைவுப் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட மொத்த பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணியின் தற்போதைய நிலை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

488/2025

கௌரவ உபுல் கித்சிறி,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1992 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது முதல் இற்றைவரை தேசிய இயந்திர உபகரண நிறுவனம் எந்த நிரல் அமைச்சின்/ அமைச்சுக்களின் கீழ் உள்ளது;

(ii) 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும், 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதியில் இருந்த ஒவ்வொரு அரசாங்கத்திலும் மேற்படி நிறுவனம் சொந்தமாகவிருந்த நிரல் அமைச்சுக்கு/அமைச்சுக்களுக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட அமைச்சர்கள் வெவ்வேறாக யாவரென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரின் கீழும், தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை, அவ்வொவ்வொரு கருத்திட்டத்தினதும் பெயர் மற்றும் பெறுமதி என்பன வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட கருத்திட்டங்களில், இற்றைவரை பணிகள் நிறைவுசெய்யப் படாமலிருக்கும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

489/2025

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையால் இரத்தினக்கல் சுரங்க அகழ்வு மற்றும் பிரித்தெடுக்கும் பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ள உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மொனராகலை மாவட்டத்தில், வெள்ளவாய பிரதேச செயலாளர் பிரிவில் இரத்தினக்கல் சுரங்க அகழ்வு மற்றும் பிரித்தெடுக்கும் பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ள உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி உரிமப் பத்திரங்கள், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் விதப்புரைகளுக்கு அமைவாக வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(iv) சுரங்க அகழ்வுப் பணிகளில் நிலவும் முறையற்ற தன்மை காரணமாக ஏற்படும் சுற்றாடல் பாதிப்பைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 மார்ச் 05, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

7/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ருஹுணு சுற்றுலாப் பணியகத்தால் மதுனாகல சுற்றுலாக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) இதன் கீழ் மதுனாகல வெந்நீர் ஊற்றைப் பயன்படுத்தி இதயத் தசை பிடித்துவிடுதல் (இதய புத்துயிரூட்டல்) நிலையமொன்றை அமைப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்திற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் இதுவரை நிறைவுசெய்யப்படவில்லை என்பதால் அந்நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் மதுனாகல சுற்றுலா வலயத்தில் நிர்மாணிக்கப் பட்டுள்ள சிற்றுண்டிச்சாலை, ஓய்வறை மற்றும் உணவகம் போன்றவற்றுக்காகச் செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) அதிகளவான பணத்தொகையைச் செலவிட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள சுற்றுலா விடுதியிலுள்ள மின் பிறப்பாக்கி செயலிழந்து காணப்படுவதுடன், விடுதியின் கூரையும் பழுதடைந்த நிலையில் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள கிராமியக் கடைவீதிக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) தற்போது மேற்படி கடைவீதி சிதைவடைந்த நிலைக்கு உள்ளாகியுள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

70/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1982 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் – பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட களுவன்கேணி – 2 பிரதேசத்தில் சீனோர் வீடமைப்புத் திட்டம் என்ற பெயரில் வீடமைப்புத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதை அறிவாரா;

(ii) மேற்படி வீடுகள்/காணிகளுக்கான உரித்து உறுதிகள் இதுவரை வழங்கப்படாததால், அவற்றில் வசிப்பவர்கள் அந்த வீடுகள்/காணிகளுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதையும் அறிவாரா;

(iii) ஆமெனில், அந்த வீடுகள்/காணிகளுக்கு உரித்து உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) எக்காலப்பகுதியில் அந்த உறுதிகள் வழங்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

91/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைச் சந்தையில் பாவனைக்குப் பொருந்தாத தரமற்ற தேங்காய் எண்ணெய் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், தரமற்ற தேங்காய் எண்ணெய் சந்தைக்கு விநியோகிக்கப்படும் முறை யாதென்பதையும்;

(iii) அதற்காகப் பயன்படுத்தப்படும் உத்திகள் யாவையென்பதையும்;

(iv) அவற்றைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) உயர் தரத்திலான தேங்காய் எண்ணெய் சந்தையில் விநியோகிக்கப்படாததற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தேங்காய் எண்ணெய் ஆலை உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரச்சினைகளுக்கான தீர்வுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

490/2025

கௌரவ சுனில் ரத்னசிரி,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “பொலன்னறுவை சிட்டி சென்டர்” இல் உள்ள மொத்தக் கடை அறைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில் இதுவரை குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள கடை அறைகளின் எண்ணிக்கை யாதென்பதயும்;

(iii) “பொலன்னறுவை சிட்டி சென்டர்” கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் அதிலுள்ள கடை அறைகளை பகிர்ந்தளித்தல் தொடர்பாக 2019 ஆம் ஆண்டு ஆளுநரின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் யாவை என்பதையும்;

(iv) தற்போது மேற்படி தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி கடை அறைகளை குத்தகைக்கு வழங்கியதன் மூலம் பொலன்னறுவை மாநகர சபைக்கு நட்டம் ஏற்பட்டிருப்பின், மேற்படி நட்டம் சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

491/2025

கௌரவ (பேராசிரியர்) எல். எம். அபேவிக்ரம,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நில்வலா கங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உவர்நீர்த் தடுப்பு காரணமாக எழுந்துள்ள சமூக, பொருளாதார மற்றும் சூழல் பிரச்சினைகள் குறித்து 2024.11.08 தொடக்கம் 2025.01.14 வரையிலான காலப்பகுதியினுள் கற்றாராய்ந்து, அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் அல்லது நீர் வளங்கள் சபை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கோரிக்கை முன்வைத்துள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி கோரிக்கை தொடர்பாக பேராதனைப் பல்கலைக்கழகம் தொழில்நுட்பக் குழுவொன்றை நியமித்துள்ளதா;

(iii) ஆமெனில், அதன் உறுப்பினர்கள் யாவர்;

(iv) இன்றளவில் அக்குழு நடவடிக்கைகளின் முன்னேற்றம் யாது;

(v) அக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் திகதி யாது;

(vi) மேற்படி குழு இதுவரையில் நியமிக்கப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 06, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

84/2024

கௌரவ ரோஹண பண்டார,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் விமானங்களின் தாமதம் மற்றும் இரத்துச் செய்யப்பட்ட விமானப் பயணங்கள் என்பவற்றின் எண்ணிக்கை ஒவ்வொரு மாதத்தின் அடிப்படையில் வெவ்வோறாக யாதென்பதையும்;

(ii) அதன் காரணமாக மேற்படி நிறுவனத்திற்கு ஏற்பட்ட மேலதிகச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்டவாறு விமானங்களின் தாமதம் மற்றும் விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்படுகின்றமை தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

104/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 நவெம்பர் 14 தொடக்கம் 2024 நவெம்பர் 13 வரையிலான காலப்பகுதியினுள் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் அரசாங்கம் மற்றும் தனியார் துறையினரால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) 2024ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கைக்கு அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அரசாங்கம் மற்றும் தனியார் துறையினரால் இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி அரிசியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) அரிசி இறக்குமதி செய்வதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி ஒரு கிலோ அரிசியின் இறக்குமதி விலை யாதென்பதையும்;

(vii) மேற்படி அரிசி சந்தைக்கு வழங்கப்படும் விலை யாதென்பதையும்;

(viii) மேற்படி அரிசி வாடிக்கையாளருக்கு விற்கப்படும் விலை யாதென்பதையும்;

(ix) மேற்படி அரிசிக்கு அரசாங்கம் விதிக்கும் வரி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

124/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையை செலுத்த வேண்டியுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர் மற்றும் செலுத்த வேண்டியுள்ள பங்களிப்புத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

189/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஜப்பானிய உதவியுடன் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களில் தற்போது இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கையும் அவற்றின் பெயர்களும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

390/2025

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட ஊழல் எதிர்ப்புக் குழு அலுவலகம் அப்போதைய பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் நிறுவப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி குழுவை நிறுவுவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்தைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அக்குழுவில் இடம்பெற்றிருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(v) ஊழல் எதிர்ப்புக் குழு அலுவலகம் மூடப்பட்டபோது அவ் அலுவலகத்திற்குக் கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஊழல் எதிர்ப்புக் குழுவின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றிய நபருடைய பெயர் மற்றும் முகவரி யாவை என்பதையும்;

(ii) இவர் அனுமதியின்றி வாகனத்தைச் செலுத்தி அதனை விபத்திற்குள்ளாக்கியதை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஏப்ரல் 11, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 2/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகள் அனுபவிக்கின்ற சிறப்புரிமைகளை பொருத்தமான வகையில் குறைத்தல்,— இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகள் அனுபவிக்கின்ற சிறப்புரிமைகள் தொடர்பில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போதும் இந்நாட்டின் சமூகத்திலும் உரையாடல் ஏற்பட்டுள்ளதால் நாட்டின் பொது மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்து அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் இலங்கைப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகளுக்கு நீண்ட காலமாக வழங்கப்பட்டு வந்த சிறப்புரிமைகளை பொருத்தமான வகையில் குறைத்தல், அகற்றுதல் அல்லது அது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தின் ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல உறுப்பினர்களிடமிருந்தும் நியாயமான பதிலை பாராளுமன்றத்தில் விவாதித்துப் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 3/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.4/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.5/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.12/2024

கௌரவ ரோஹண பண்டார,— அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகத்தின் போது அரச துறையின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் ஏனைய பொருட்களை இறக்குமதி செய்கின்ற செயல்முறையானது ஒரு சிலரின் கைகளில் உள்ள நிலையில் மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்ற காரணத்தினால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக அரச துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.14/2024

கௌரவ ரோஹண பண்டார,— கிராமிய கூட்டுறவு வங்கிக் கட்டமைப்பை உரிய முறையில் மேற்பார்வை செய்வதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— மக்களுக்கு மிக நெருக்கமான பல கிராமிய கூட்டுறவு வங்கிகள் கடந்த காலப்பகுதியில் பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியடைந்தமையின் அடிப்படையில் அதன் வைப்பாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதால், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக அவ்வங்கிகளை அரசாங்கம் உரிய முறையில் மேற்பார்வை செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.18/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பாரம்பரிய பல்கலைக்கழக கட்டமைப்புக்கு அப்பால், தொழிற்சந்தை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தை இலக்காகக் கொண்ட வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் குறித்து பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.19/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் நிகழும் பல்வேறு நிதி மோசடிகள் தொடர்பான விடயங்கள் கணக்காய்வறிக்கைகள் ஊடாக வெளிப்படுத்தப்படுவதால், அரச நிறுவனங்களில் அவ்வாறான ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெறுவதைத் தடுக்கும் பொருட்டு அவ்வறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

பா.20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரித்தல்,— இலங்கையின் தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 25/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாழ்வதற்கு வீடு ஒன்றை வழங்குதல்,— இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் வாழ்வதற்கான வீடு ஒன்றிற்கு உரித்துடையதாக இருத்தல் வேண்டும் என்ற காரணத்தால் பிரதான குடியிருப்பாளரின் உடற் பாதுகாப்பு, பௌதீகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக வீடு ஒன்றை வாங்குவதற்கு, கட்டுவதற்கு அல்லது வாடகைக்குப் பெறுவதற்கு அவரை வலுவூட்டுவதன் மூலம் அவருக்கு வசதிசெய்து கொடுத்தல் அவசியமாகும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா. 27/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒவ்வொரு இளைஞரையும் போதுமான வருமானத்தை ஈட்டும் தொழிலைக் கொண்டிருக்கும் ஆளாக அல்லது சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுதல்,— 18 வயதை அடைந்த ஒவ்வொரு இளைஞருக்கும் போதிய வருமானமீட்டும் தொழிலைக் கொண்டிருப்பதற்கான உரிமை இருக்க வேண்டும் அல்லது தொழில்புரியாது இருப்பின், சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுவதற்கான நிதியுதவி வழங்கப்படுதல் வேண்டும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.